8th March 1965]

பிடிக்கப்பட்டு அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. ஆகவே இந்த ரிபேட் முறையை, இப்போது கொடுக்கப்படுகிற முறையை, மாற்றி வேறு முறையில் நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்கான முறையை ஏற்படுத்த ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெசவாளர் சங்கங்களிடம் இருந்து அந்தவிதமான கோரிக்கைகள் வருமானால் சர்க்கார் பரிசீலனை செய்யும். இப்போதுள்ளபடி இந்த முறைதான் நல்லது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

Financial assistance to weavers

* 177 Q.—SRI M. V. KERIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the nature of help rendered by the Handloom Finance Corporation to weavers; and

(b) the number of weavers benefited so far?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இது வரை ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

இந்தக் கேள்விக்கு பதில் எழுதிய பிறகு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலிருந்து காஷ் க்ரெடிட் நடைமுதல் பணம் 2 கோடி ரூபாய் இந்த கார்ப்பரேஷனுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இப்போது கடன் கொடுக்கத் தொடங்கி விடும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இரண்டு கோடி ரூபாய் கடன் வழங்கியிருப்பதாகவும், கடன் கொடுக்கத் தொடங்கியிருப்பதாக வும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதனுடைய விவரத்தைச் சுருக்கமாக வெளியிடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி கேட்டால் ஒரு அறிக்கை மேஜை மீது வைக்க முடியும். விவரங்களை வாயால் சொன்னால் ஒன்றுக்கு ஒன்று விட்டுப்போய் விட்டால் பிரசுரம் ஆகும்போது தவறான பிரசுரம் வந்துவிடும் என்று அஞ்சுகிறேன்.

Spinning mill (Kanyakumari district)

* 178 Q.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether sanction has been accorded for the opening of a spinning mill in Kanyakumari district in the private sector; and

(b) whether the mill has started functioning?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government of India have issued a licence for the establishment of a cotton spinning mill with 12,000 spindles in the private sector in Kanyakumari district.

(b) The mill has not been established yet.